

விழுப்புரம் நகரம், முன்னாள் வர்த்தகர் சங்க தலைவரும், தி.மு.க. முன்னாள் நகர வர்த்தக அணி அமைப்பாளருமான ஏ.ஆர்.மாதவன் மறைவிற்கு கழக துணைப் பொதுச்செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், நகர செயலாளர் இரா.சக்கரை, மருதம் இரவி கார்த்திகேயன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கேபிள் டிவி சுரேஷ்பாபு, வார்டு செயலாளர் பிரபு, தகவல் தொழில்நுட்ப அணி அபுபக்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.



தூத்துக்குடி வருகை தந்த கழகத் துணை பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதியை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். உடன் ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இமானுவேல் உள்ளிட்டோர் உள்ளனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி தூய்மைப் பணியாளர்கள் வேலைநிறுத்தம்!

பேச்சுவார்த்தை தோல்வி! தொடரும் போராட்டம்!

மதுரை மாநகரில் சுகாதாரச் சீர்கேடு!

மதுரை, அக். 8-

தனியார் மயத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் நேற்று காலை முதல் வேலைநிறுத்தப் போராட்டம் துவங்கினர் இதனால், மாநகரமே குப்பைக்காடான நிலையில் பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படாததால், மறு பேச்சுவார்த்தைக்கு நக ராட்சி நிர்வாக இயக்கு நரை சந்திக்க நேற்று தொழிற்சங்கத்தினர், அதி காரிகளுடன் சென்னை புறப்பட்டுச் சென்றனர்.

மதுரை, நாகர்கோவில் மா ந க ர ா ட் சி க ளி ன் பாதாளச் சாக்கடைத் திட் டங்களை தனியாரிடம் ஒப்படைக்க தமிழக அரசு முயற்சி எடுத்து வருகிறது. இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்து வரும் நிலையில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தூய்மைப்பணி யாளர்கள் போராட்டம் துவக்கியுள்ளனர். தூய்மை பணியில் தனியார் மயத் தைக் கைவிட வேண்டும். தனியார் ஒப்பந்த நிறுவ னத்தை வெளியேற்ற வேண்டும். மதுரை மாநக ராட்சியில் பணிபுரியும் தினக்கூலி தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும், வாரிசு வேலை வழங்க வேண்டும். சுகாதாரம் மற்றும் பொறி யியல் பிரிவின் அனைத்துப் பணியாளர்களுக்கும் தீபா வளி போனஸ் 8.33 சதவீ தம் வழங்க வேண்டும் உள் ளிட்ட 16 அம்ச கோரிக்கை களை வலியுறுத்தி மதுரை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் பல்வேறு போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

மதுரை மாநகராட்சி தொழிலாளர் சங்கம், தமிழ்நாடு சுகாதார பணி யாளர்கள் முன்னேற்ற சங் கம், தொழிலாளர் முன் னேற்ற சங்கம் இணைந்த தூய்மை பணியாளர்களின் இப்போராட்டங்களைத் தொடர்ந்து அக். 3ல் நக ராட்சித்துறை கூடுதல் இயக்குனர் இளங்கோ வன், மாநகராட்சி கமிஷ னர் சவ்ரவ்குமார்

ஆகியோர் தொழிற்சங் கம்களுடன் நடத்திய பேச்சு வார்த்தை தோல்வி யில் முடிந்தது. இதைத்தொ டர்ந்து நேற்று காலை முதல் தூய்மை பணியாளர் கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை துவக்கியுள்ளனர்.

காந்தி ஜெயந்தி, பள்ளி விடுமுறை போன்றவை முடிந்து திங்கட்கிழமை பணிநாளான நேற்று மது ரையில் பல இடங்களிலும் ஏற்கனவே குப்பைகள் தேங்கி துர்நாற்றம் வீசி வருகிறது. தூய்மைப் பணி யாளர்களின் போராட்டத் தால் மேலும் குப்பை சேர்ந்து நகரமே கடும் சுகாதாரச் சீர்கேட்டிற்கு ஆளாகி வருகிறது. இப் போராட்டத்தால் வடகி ழக்கு பருவ மழை முன் னெச்சரிக்கை நடவடிக்கை கள் முடங்குவதுடன், டெங்கு கொசு ஒழிப்பு பணிகளும் பாதித்துள்ளன.

தூய்மைப் பணியாளர் கள் போராட்டத்தை சமா ளிக்கும் வகையில் 100 வார் டுகளிலும் வார்டுக்கு தலா ஒரு டிராக்டர், 10 பணியா ளர்கள் சுழற்சி முறையில் பணியமர்த்தி துப்புரவு பணி மேற்கொள்ளப்படும் என மாநகராட்சி அறி வித்திருந்தபோதும், நேற்று குறைந்தளவிலான சில ரைக்கொண்டு பெயரள விலில் அரசு மருத்துவமனை உள்ளிட்ட ஓரிரு இடங்க ளில் குப்பைகள் அகற்றப் பட்டன. நகரின் பல பகுதி களும், குப்பை மேடாக காட்சியளித்து துர்நாற்றம் வீசி வருகிறது.

திருப்பத்தூர் அருகே சுங்கச்சாவடி திறப்புக்கு பூமாலைகள் வாங்கிய

ஒப்பந்ததாரர் பணம் தராமல் இழுத்தடிப்பு - பொய்ப் புகார்!

பூ வியாபாரிகள் போராட்டத்தால் பரபரப்பு!

சிவகங்கை, அக். 8 -

சிவகங்கை மாவட் டம் திருப்பத்தூர் தாலுகா திருப்பத்தூர் பிள்ளை யார்பட்டி சாலையில் புதிதாக சுங் கச்சாவடி ஒன்று அமைக் கப்பட்டு அதன் திறப்பு விழா ஒரு மாதத்திற்கு முன்பு நடைபெற்றது இந்த சுங்கச்சாவடி தேனியைச் சேர்ந்தவர் ஒப்பந்ததாரர் ஆவார். சுங்க ச்சாவடி மேலாளர் தி ரு ப் ப த் தூ ர் பூக்கடையில் நிலை மாலைகள், மாலைகள், உதிரிப் பூக்கள் மற்றும் கலர் பலூன்கள் சப்ளை செய்வதற்கு ரூபாய் 95 ஆயிரம் செலவில் ஆர் டர் செய்யப்பட்டு பூமா லைகள் நிலை மாலை கள் பலூன்கள் சுங்கச்சாவடி திறப்பு விழாவிற்கு தரப்பட் டது. .ஆனால் ஒரு மாதத் திற்கு மேல் ஆகியும் சுங் கச்சாவடி நிர்வாகிகள் ரூபாய் 95 ஆயிரம் எது வும் தரவில்லை. ஆறு மணி நேரத்திற்குள் அவர்கள் கேட்ட பூ மாலைகள் உதிரி புஷ் பங்கள் மாலைகள் நிலை மாலை கள் போன்ற பூக் களை தயார் செய்து கொ டு த் த பூ வியாபாரிகள் பலமுறை சுங்கச்சாவடி ஒப்பந்தா ராரிடம் பணம் கேட்ட தற்கு அவர் பணம் தரா மல் சாக்கு சொல்லி வந்தார். மேலும் சுங் கச் சாவடி ஒப்பந்ததாரர் பூவியாபாரிகள் மீது புகார் கொடுத்துள்ளார். இ து கு றி த் து திருப்பத்தூர் போலிசார் பூ வியாபாரிகள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வரு கிறார்கள். அவசரமாக சுங்கச்சா வடி ஒப்பந்த தாரர் பூ ஆர்டர் கேட்ட தற்கு குறித்த நேரத்தில் சப்ளை செய்துள்ளனர். ஒரு மாதமாக பணம் தராமல் அலையவிட்ட சுங் கச்சாவடி ஒப்பந்த தாரர் பணம் தராமல் போலிஸில் பொய் புகார் கொடுத்துள்ளார்.

இதை கண்டித்து நேற்று முன் திருப்பத்தூர் நகரில் உள்ள பூக்கடை வியாபாரி கள் சங்கத் தின் சார்பில் சுங்கச் சாவடி ஒப்பந்ததாரரைக் க ண் டி த் து ம் , பூமாலைகள் கொடுத்த தற்கான பணம் ரூபாய் 95ஆயிரத்தை உடனடி யாக தரக்கோரியும், பூ வியாபாரிகள் மீது திருப் பத்தூர் போலீசில் கொடுத்த பொய்புகா ரினை திரும்பப்பெற வ லி யு று த் தி யும் திருப்பத்தூர் நகரில் உள்ள 30க்கும் மேற்பட்ட பூக்க டைகள் முழுமையாக அடைக்கப்பட்டது.

இது தொடர்பாக அண்ணா சிலை அருகே பூவியாபாரிகள் சங்கத் தின் சார்பில் ஆர்ப்பாட் டம் நடைபெற்றது .இது ப ற் றி த க வ ல் கிடைத்ததும் திருப்பத் தூர் போலீசார் இரு தரப் பினரிடையே பேச்சு வார்த்தை நடத்தினார் கள் சுங்கச்சாவடி ஏஜென்சியினர் விரை வில் ப ண த் தை திருப்பிதருவதாகவும், பூ வியாபாரிகள் மீது போலிஸில் கொடுத்த புகாரை திரும்பப் பெறு வதாக கூறினார்கள். இத னால் பூ வியாபாரிகள் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. பணம் த ரா வி ட் ட ால் தொடர்ந்து போராட் டத்தில் ஈடுபடுவது

என்று பூக்கடை வியா பாரிகள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளார்கள் .இதனால் திருப்பத்தூர் ப கு தி யி ல் க ட ந்த இரண்டு நாட்களாக பர பரப்பு ஏற்பட்டது.

த.வெ.க. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சீர்கேடு!

மதுரை சோழவந்தானில் அடுத்தடுத்து கொலை!

மக்கள் அச்சம்!

மதுரை, அக்.8-

மதுரை சோழவந்தானில் அடுத்தடுத்து நடைபெறும் தொடர் படுகொலைகள் சம்பவங்களால் பொதுமக் கள் கடும் அதிர்ச்சி அடைந் துள்ளனர். மாநிலத்தில் அரசு என்ற ஒரு செயல்படு கிறதா என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதியைச் சேர்ந்தவர் சியாம் சுந்தர் ராஜன் என்பவர், சாலை யில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, டாஸ்மாக் மதுக் கடை அருகே அவரை மர்ம நபர்கள் வழிமறித்து, பயங் கர ஆயுதங்களால் வெட் டிப் படுகொலை செய்து விட்டு தப்பியோடினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தக வல் அறிந்து வந்த சோழவந் தான் காவல்துறையினர், சுந்தரின் உடலைக் கைப் பற்றி உடற்கூறு ஆய்வுக் காக அரசு மருத்துவம னைக்கு அனுப்பி வைத்தனர். கொலைக்கான காரணம் குறித்து விசா ரணை நடத்தி வருகின்ற னர். த.வெ.க. ஆட்சியில் நாள்தோறும் சர்வ சாதார ணமாக கொலை சம்பவங் கள் நடைபெறுவதால் பொதுமக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். த.வெ.க. ஆட்சியில் உயிரை கையில் பிடித்து கொண்டு வாழ்ந்து வருவதாக வேதனை தெரி வித்துள்ளனர். சோழவந் தான் பகுதியில் கஞ்சா மற் றும் கள்ளச் சந்தையில் மதுவிற்பனை சர்வ சாதார ணமாக நடைபெறுவதாக வும், இதனால் பலர் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி குற்றச் சம்ப வங்களில் ஈடுபடுவதாகவும் பொதுமக்கள் குற்றம்சாட்டி யுள்ளனர். சோழவந்தான் அருகே தென்கரை பகுதி யில் கடந்த இரண்டு மாதங் களுக்கு முன்பு முன் விரோ தம் காரணமாக பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட் டார். அதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் செக்கா னூரணி அருகே தேங்கள் பட்டி பகுதியில் இளைஞர் டிரைவர் வெட்டிப் படு கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை சோழவந்தானில் டாஸ்மாக் அருகே ஓட்டு னர் படுகொலை

பயங்கர ஆயுதங்களால் வெட்டி படுகொலை செய் யப்பட்ட ஓட்டுனர் த.வெ.க. ஆட்சியில் கொலை நகராகும் மதுரை

தொடர் கொலைகளால் மக்கள் அச்சம் மதுரை மாவட்டம் சோழவந்தா னில் 36 வயதான சியாம் சுந்தர் ராஜன் என்பவர் படு கொலை இருசக்கர வாக னத்தில் சென்ற சுந்தர் ராஜனை டாஸ்மாக் கடை அருகே வழிமறித்த மர்ம கும்பல், பயங்கர ஆயுதங் களால் வெட்டி கொலை செய்தது மதுரை சோழவந் தான் அருகே தென்கரை பகுதியில் அண்மையில் பட் டப் பகலில் இளைஞர் ஒரு வர் வெட்டிக் கொல்லப்பட் டார். நேற்று முன்தினம் மதுரை செக்கானூரணி அருகே தேங்கள்பட்டி பகு தியில் இளைஞர் வெட்டிப் படுகொலை செய்யப் பட்டார்.

மதுரையில் அடுத்தடுத்து அரங்கேறும் கொலைச் சம் பவங்களால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

"அண்ணன் சீர்" திட்டத்தில் வருமான வரம்பு குறைப்பு!

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மக்களை ஏமாற்றும் விஜய்!

சென்னை, அக். 8-

அ ண் ண ன் சீ ர் திட்டத்தில் தேர்தல் வாக் குறுதியின்படி வருமா னத்தை நிர்ணயிக்காமல், அரசாணையில் குறைத்து உத்தரவிட்டது மக்கள் மத் தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அண்ணன் சீர் திட்டத் துக்கு 812 கோடி ரூபாய் ஒதுக்கி அரசாணை வெளி யிடப்பட்டுள்ளது.

த.வெ.க தேர்தல் அறிக் கையில் ஆண்டுக்கு 5 லட் சம் ரூபாய் வருமானம் இருக்கும் அனைவரும் இத் திட்டத்தின் மூலம் பயன் பெறலாம் என த.வெ.க. அறிவித்திருந்தது.

தற்போது வெளியிடப் பட்ட அரசாணையியில், ஆண்டு வருமானம் 2.5 லட்சம் ரூபாய்க்கு உட்பட் டவர்கள் மட்டுமே இந்த திட்டத்தில் பயன்பெற முடியும் என்று நிபந்தனை விதித்துள்ளது.

இதனால், அண்ணன் சீர் திட்ட அரசாணை, மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி யைதான் ஏற்படுத்தி யுள்ளது.

தேர்தல் வாக்குறுதி களில் ஒன்றைக்கூட த.வெ.க. அரசு முழுமை யாக நிறைவேற்றவில்லை என்று பொதுமக்கள் குற் றம் சாட்டியுள்ளனர்.

பயிர்க்கடன் தள்ளுபடி யில் தொடங்கி அண்ணன் சீர் திட்டம் வரை அனைத்து வாக்குறுதிகளை யும் பாதிப்பாதி தான் நிறைவேற்றுவாரா விஜய், என்று மக்கள் ஆவேசத்து டன் கேள்வி எழுப்பியுள்ள னர்.

தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

ஈ.ராஜா எம்.எல்.ஏ. சகோதரர் ஈ.பாலமுருகன் மறைவு!

திருவுருவப் படத்திற்கு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. – வே.ஜெயபாலன்– தென்காசி மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. மரியாதை!

தென்காசி, அக். 8 –

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் ஈ.ராஜாவின் அண் ணனும் தென்காசி 31 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஈ. பாலமுரு கன் (வயது 43) அவர்கள் தென்காசி சிந்தாமணியில் உள்ள அவரது இல் லத்தில் வைத்து இயற்கை எய்தி னார்.

அன்னாரது இல்லத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கனி மொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி அவர்கள் நேரில் சென்று மறைந்த ஈ.பாலமுருகன் அவர்களின் திருவு ருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

தென்காசி மாவட்டம் தென்காசி சிந்தாமணியில் வசித்து வரும் கழக முன்னோடி ஈஸ்வரன்மறைந்த வள் ளியம்மாள் ஆகியோர்களின் மக னும் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் வாசுதேவநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் ஈ.ராஜாவின் அண் ணனும் தென்காசி 31 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஈ. பாலமுரு கன் (வயது 43) அவர்கள் நெஞ்சு வலி ஏற்பட்டு அன்னாரது இல்லத் தில் (கடந்த 03.10.2026 சனிக்கி ழமை) அன்று இரவு 8 மணி அளவில் இயற்கை எய்தினார். அவருக்கு கிருஷ்ணவேணி என்ற மனைவியும் (7 வது வார்டு ஆரம்பப்பள்ளி ஆசி ரியை) பிரயுஸ் (வயது 17) மகனும் பிரதிக் ஷா (வயது 17) பிரித்திகா (வயது 12) என்ற இரண்டு மகளும் உள்ளனர்.

தென்காசி சிந்தாமணி யில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனி மொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் நேரில் சென்று மறைந்த ஈ.பாலமுருகன் அவர்களின் திருவுரு வப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபா லன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பி னர் மரு.ராணி ஸ்ரீகுமார், தூத்துக் குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரிய சாமி, மாநில கல்வியாளர் அணி இணைச் செயலாளர் ஆலடி எழில்வா ணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச் செல்வி, தட்சிண மாற நாடார் சங்கத் தலைவர் ஆர்.கே. காளிதாஸ், நகர்மன்றத் தலைவர்கள் சாதிர் (தென்காசி) மூப்பன் ஹுபீபுர் ரகு மான் (கடையநல்லூர்) மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி.கனிமொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, ஒன்றிய செயலா ளர் கள் வேஷ்க் முகமது,திவான் ஒலி, சீனித்துரை,ஜே.கே.ரமேஷ், தென்காசி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் வேஷ்க் அப்துல்லா,செங்கோட்டை நகர செயலாளர் வெங்கடேசன்,இலஞ்சி பேரூர் துணைச் செயலாளர் ஜீவானந் தம், மாவட்ட தொண்டரணி அமைப்பா ளர் இசக்கி பாண்டியன்,மாணவரணி அமைப்பாளர் மஹ்முதா,தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப் பாளர் சபிக் அலி உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு மலர் தூவி மரியாதை!

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ராஜாவின் அண்ணனும் தென்காசி 31 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் பாலமுருகன் (வயது 43) அவர்கள் தென்காசி சிந்தாமணியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து இயற்கையை எய்தினார்.

அன்னாரது இல்லத்திற்கு கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என். நேரு,மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் சாதிர், நெல்லை மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பா ளர் முத்துக்குமார் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

காரைக்குடியில் ஆட்டோ ஓட்டுநருக்கு அரிவாள் வெட்டு!

காரைக்குடி, அக்.8-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி செஞ்சை பகுதி யில் ஆட்டோ ஓட்டுநர் பிர தாப்பை, இருசக்கர வாக னத்தில் வந்த மர்ம நபர்கள் அரிவாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் பர பரப்பை ஏற்படுத்தியுள் ளது.

காரைக்குடி M.M வீதியில் உள்ள RMR துணிக்கடை வாசல் பகுதியில் பிரதாப் ஆட்டோ ஓட்டி வந்துள் ளார். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள், பிரதாப் ஓட்டி வந்த ஆட்டோவை வழி மறித்து, அவரை அரிவா ளால் வெட்டியதாக கூறப் படுகிறது. இதில் காயம டைந்த பிரதாப்பை காரைக்குடி தெற்கு காவல் துறையினர் மீட்டு, 108 ஆம் புலன்ஸ் மூலம் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து வழக் குப்பதிவு செய்த போலீ ஸார், தாக்குதல் நடத்திய மர்ம நபர்கள் யார், எதற் காக தாக்குதல் நடத்தப்பட் டது, பிரதாப்புக்கும் அவர் களுக்கும் இடையே முன்விரோதம் ஏதேனும் உள்ளதா என்பது உள் ளிட்ட பல்வேறு கோணங் களில் விசாரணை நடத்தி வருகின்றனர். மக்கள் அதி கம் கூடும் RMR துணிக்கடை வாசல் பகுதியில் ஆட்டோ ஓட்டுநர் அரிவாளால் வெட்டப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியுள்ளது.

தஞ்சை மத்திய மாவட்ட பொறியாளர் அணி

அமைப்பாளர் பொறி.அ.ராமசேகர் மறைவு!

மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

தஞ்சாவூர், அக்.8-

தஞ்சை மத்திய மாவட்ட பொறியாளர் அணி அமைப் பாளர் பொறி.அ.ராமசேகர் நேற்று 07.10.2026 புதன் கிழமை அதிகாலை 05.00 மணியளவில் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தி னார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.


திருவையாறு வட்டம், கீழப்புனல்வாசல் பகுதியை சேர்ந்த பொறி.அ.ராமசேகர் சிறுன்வயது முதல் கழகத் தின்பால் பற்று கொண்டவ ராக இருந்தார். கழகம் அறி வித்த போராட்டங்கள்,



ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டங்களில் தவ றாது பங்கு கொண்டவர். கழக முன்னனி தலைவர்க ளால் எஞ்சினியர் என்று பாசமாக அழைக்கப் பட்டார்.

பொறி.அ.ராமசேகர் மறைவுச் செய்தி அறிந்த தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந் திரசேகரன் எம்.எல்.ஏ, கீழப்புனல்வாசலில் உள்ள ராம்சேகர் இல்லத்திற்கு கழக நிர்வாகிகளோடு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வ லம் நேற்று 07.10.2026 புதன்கிழமை மாலை 05.00 மணியளவில் அவரது சொந்த ஊரான கீழப்புனல்வாசலில் நடை பெற்றது.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்ட பகுதி பிரதிநிதி டி.யோகேஸ்வரனின் மாமா கணேசன் அவர்களின் 16ஆம் நாள் படத்திறப்பு நிகழ்ச்சியில் தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்டப் பொறுப்பாளர் மா. பா.அன்பு, மாவட்ட பிரதிநிதிகள் மு.உதயசூரியன், என்.வி.லோகநாதன், மு.சரவணன், சி.எஸ்.நந்தகுமார், டி.ரூப்நாத், கே.ரவிக்குமார், எம்.மணிகண்டன், சி.ஜோசப், மார்க்கெட் சுரேஷ், எஸ்.சீனு, பி.ஆர்.அருண், எம்.அல்ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.